அப்பூதியடிகள் திருநாவுக்கரசரின் மீது கொண்ட இறைபக்தியின் கதையை நிரல்படுத்தி எண்களிட்டு எழுதுக.

| | |
|---|---|
| | மூத்த புதல்வனான திருநாவுக்கரசைக் கொல்லையில் இருக்கும் வாழை மரத்திலிருந்து இலையை அறுத்து எடுத்து வரும்படி அனுப்பினார் அருள்மொழி அம்மையார். |
| | அப்பூதியடிகள் திருநாவுக்கரசரைக் கண்டதும் அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஆனந்தமடைந்தார். |
| | இருப்பினும், அவன் இறந்த செய்தியைக் கேட்ட திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசின் உடல் இருந்த இடம் சென்றார். |
| | அவனும் விரைந்து சென்று நல்ல குருத்தை அறுக்கும் பொழுது ஒரு நல்ல பாம்பு அவன் கையைத் தீண்டியது. |
| | சிவபிரானின் அருளால் பாம்பு தீண்டிய நஞ்சு அகன்றது. மூத்த திருநாவுகரசு எழுந்து நாவரசரை வணங்கினான். நாவரசரும் அவனுக்குப் புனிதத் திருநீற்றை வழங்கி ஆசிர்வதித்தார். அப்பூதியடிகளின் குடும்பத்தினர் திருநாவுகரசரின் வல்லமையைப் போற்றி அவரை வணங்கினர். |
| | தனது இல்லத்தில் அமுதுண்ண வேண்டும் என்ற அப்பூதியடிகளின் வேண்டுதலுக்கு இணங்கினார் திருநாவுக்கரசர். |
| | மகன் இறந்த செய்தியை மறைத்து, அப்பூதியடிகள் திருநாவுகரசருக்கு விருத்துப் படைப்பதில் முனைப்புக் காட்டினார். |
| | இறந்த சிறுவனின் உடலைத் திருக்கோயில் முன் கிடத்தி, பதிகம் பாடினார். |
| | விஷம் தலைக்கேறுமுன் இந்தக் குருத்தை அன்னையிடம் சேர்ப்பிக்க ஓடோடி வருகிறான் ; குருத்தை அவரிடம் கொடுத்து விட்டு மயங்கி வீழ்ந்து விட்டான். |
| | அப்பூதியடிகளின் மனைவி அருள்மொழி அம்மையார் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அக்கறையுடனும் அறுசுவை உணவு வகைகளைத் தயார் செய்ய ஆரம்பித்தார். |

LIVEWORKSHEETS

LIVEWORKSHEETS